இந்தச் சபையில் வைக்கப்படுமா? இந்தியை எதிர்க்கும் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? உரிய நடவடிக்கை எடுப்போம் என்று ஒரே வரியில் பதில் சொல்லாமல் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை இந்தச் சபைக்குத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கிளப்பிய பிரச்சினை அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனின் அறிக்கை இந்தியில் வந்தால்தான் அதுபற்றி பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு, தமிழக அரசுக்கு அதுபற்றி தகவல் வந்திருக்கிறதா என்று கேட்டார்கள். பத்திரிகையிலே கூட நான் செய்தியைப் பார்த்தேன். கேரளாவில் இப்படிப்பட்ட ஒரு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழக அரசுக்கு எதுவும் இதுவரை அனுப்பப்படவில்லை. திடீரென்று கேட்டிருக்கிறார்கள். செய்தியை சேகரித்து, இந்த அவைக்கு நான் தெரிவிப்பேன் என்று கூறிக்கொள்கிறேன்.

(ஆ) விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, தங்களுக்கு உதவக்கூடிய நோக்கத்திலே தான் சொல்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் ஓர் அறிக்கையினை வைக்க இருக்கின்றார்கள். அந்த அறிக்கை சட்டமன்ற மேலவையிலே வைக்கப்பட்டு பத்திரிகைகளிலே கூட வந்துவிட்டது. ஆகவே, அதற்குப் பிறகு இங்கே வைத்து சபையின் நேரத்தை வீணாக்குவது நல்லதாக இருக்காது. ஆகவே, புதிய அறிக்கையாக இருந்தால் அதனை இங்கே அவர்கள் வைக்கட்டும் என்கின்ற ஆலோசனையைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

(இ) பேரவைத் தலைவரை பதவியில் இருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து.

* திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே ஒரு நோட்டீஸ் ஃபார் ரெமூவல் ஆப் தி ஸ்பீக்கர் கொடுத்திருக்கிறேன். சட்டப்படி 14 நாட்கள் ஆகிய பிறகு தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சட்டத்திலே விதி இருக்கின்றது. ஆனால் நாளைய்தினம் நம்முடைய சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடர் முடியப்போகிறது. முதல் தேதி கொடுத்தால் 15ஆம் தேதிதான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது விதி. ஆகவே 15ஆம் தேதி சட்டமன்றம் கூடுமா, அந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுமா என்பதுதான் என்னுடைய முதல் வாதம்.